வைத் தமிழ்ச்சங்க வெளியீடு-௪.

உ

திருச்சிற்றம்பலம்

கடவுள் வணக்கச் செய்யுட்கள் உரைக் குறிப்புகளுடன்

C. K. சுப்பிரமணிய முதலியார், B. A.,
C. M. இராமச்சந்திரஞ் செட்டியார், B.A., B.L.
(சென்னை சர்வகலா சங்கத்தின் அங்கத்தினர்கள்.)

கோவைத் தமிழ்ச் சங்கம்
கோயமுத்தூர்
Jan. 1926

[விலை அணா 3

22:417
N26
225

கோவைத் தமிழ்ச்சங்க வெளியீடு—2

கடவுள் வணக்கச் செய்யுட்கள்
உரைக் குறிப்புகளுடன்.

(இரண்டாவது பதிப்பு)

C. K. சுப்பிரமணிய முதலியார், B. A.,
C. M. இராமச்சந்திர செட்டியார், B. A., B. L.,
(சென்னை சர்வகலா சங்கத்தின் அங்கத்தினர்கள்.)

கோயமுத்தூர்.

1926

Printed by
C. Munisawmy Mudaliar & Sons.
306, Linga Chetty Street,
MADRAS.

1

உ

கடவுள் துணை.

முன்னுரை

நமது மாகாணத்தில் பாடசாலைகளில் பிள்ளைகளுக்கு மத போதனையைச் செய்யவேண்டுமென்று சில காலமாக ஜனங்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சர்க்காரார் 1922-ஆம் ஜூலை-மீ 15-உ யிட்ட G. O. 836ல் உத்தரவு செய்து, பாடசாலைகளில் கடவுள் வணக்கமும் மத போதனையும் செய்யலாம் என்று ஏற்படுத்தி அவற்றிற்குச் சில நிபந்தனைகளையும் பிரசுரித்திருக்கிறார்கள். இவ்வுத்தரவுக்குப் பின் நமது பிரதம பாடசாலைகளில் ஒவ்வொரு நாளிலும் தொடக்கத்திலும், கடைசியிலும் கடவுள் வணக்கப்பாட்டுகள் சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனால் அவைகளைக் கற்பிக்கத் தகுதியான பாட புத்தகம் வெளிவராத குறையினால் நாடகப் பாட்டுகளையும் சொல் நயம் பொருள் நயம் இல்லாத பாடல்களையும் உபாத்தியாயர்கள் கற்பிப்பதையும் பிள்ளைகள் சொல்வதையும் பார்க்கிறோம். இதுவன்றி பொருள் கற்பிக்கப்படாததினால் பிள்ளைகள் இன்னது சொல்லுகிறோம் என்பதை அறியாமல் இருக்கிறார்கள். இக்குறையை நீக்கும் பொருட்டு நம் பெரியோர்களின் அருள் வாக்குகளிலிருந்தும் திருவாக்குகளிலிருந்தும் அந்தந்த வகுப்புக்குத் தகுதியான பாடல்களைத் தெரிந்தெடுத்துத் தொகுத்து சிறு குறிப்புரைகளையும் சேர்த்து இந்நூலைப் பிரசுரித்திருக்கிறோம். உரைக் குறிப்புகளை உபாத்தியாயர்கள் படித்துத் தெரிந்து கொண்டு பிள்ளைகளுக்குப் போதிக்க வேண்டும். அந்தந்த வகுப்புக்கு சிற்சில பாடல்களைக் கற்றுக்கொடுத்தால் போதுமானது. 1 முதல் 5 வகுப்புகளுக்கு மாத்திரம் பாடல்களைப் பிரித்து விட்டிருந்த போதிலும்

8-வது வகுப்பு வரையிலும் அவற்றில் சிறிது கடினமான பாடல்களைக் கற்பிக்கலாம். அப்போது அநுபந்தத்தில் உள்ளவைகளையும் சேர்த்துக் கொள்ளலாம்.

ஞாயிற்றுக் கிழமையில் மத போதனை வகுப்புகள் வைத்திருக்கும் பாடசாலைகளில் இப்புத்தகத்தை மிகுதியும் கையாடலாம் என்று எண்ணுகிறோம். இதனால் நம் சிறுவர்களுக்கு மத விஷயத்தில் சிறிது அதிக உற்சாகம் ஏற்படும் என்றும் அதனால் நமது தேசம் நன்மையடையும் என்றும் நம்பி இதை வெளியிட்டிருக்கிறோம்.

கடவுள் அருள் புரிவாராக !

இரண்டாம் பதிப்பின் முன்னுரை

இப்புத்தகம் அச்சிட்ட ஒரு வருஷத்தில் பிரதிகள் முழுதும் செலவாய்விட்டன. அதனால் இது பொது மக்களின் ஆதரவைப் பெற்றிருக்கிறதென்று தெரிய மகிழ்கின்றோம். மேன்மேலும் அங்கங்கே பாடசாலை அதிகாரிகளும் மற்றும் மகா ஜனங்களும் இதன் பிரதிகளைக் கோரி எழுதுகின்றார்கள். ஆதலின் சில பாடல்களைச் சேர்த்தும் உரைக் குறிப்புகளிலும் மற்றும் சிற்சில திருத்தங்களுடன் இவ்விரண்டாம் பதிப்பை வெளியிடலானோம். நகர பரிபாலன சங்கத்தார்களும் தாலூகா டிஸ்திரிக்ட் போர்டு சங்கத்தார்களும் தத்தம் அதிகாரத்தின்கீழ் வைத்து நடத்தும் பள்ளிக்கூடங்களில் இதனை உபயோகித்து நமது சிறுவர்களுக்கு மத உணர்ச்சி உண்டாகும்படி செய்தால் மிகவும் நன்மையுண்டாகும்.

கடவுள் கருணை செய்வாராக!

கோவை.
ஜனவரி, 1926.

க. சு.
ம. ரா.

கடவுள் வணக்கச் செய்யுட்கள்.

I, II. வகுப்புகள்.

1. தலையே நீ வணங்காய்—தலை
மாலை தலைக்கு அணிந்து
தலையாலே பலி தேரும் தலைவனைத்
தலையே நீ வணங்காய்.

2. கண்காள் காண்மின்களோ—கடல்
நஞ்சுண்ட கண்டன் தன்னை
எண்தோள் வீசி நின்றாடும் பிரான் தன்
கண்காள் காண்மின்களோ. [னைக்

3. செவிகாள் கேண்மின்களோ—சிவன்
எம் இறை செம் பவள
எரி போல் மேனிப் பிரான் திறம் எப்போ
செவிகாள் கேண்மின்களோ. [தும்

4. மூக்கே நீ முரலாய்—முது
காடு உறை முக் கணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை
மூக்கே நீ முரலாய்.

5. வாயே வாழ்த்து கண்டாய்—மத
யானை உரி போர்த்துப்
பேய் வாழ் காட்டகத்து ஆடும் பிரான்
வாயே வாழ்த்து கண்டாய். [தன்னை

6. நெஞ்சே நீ நினையாய்—நிமிர்
புன்சடை நின்மலனை
மஞ்சாடும் மலைமங்கை மணாளனை
நெஞ்சே நீ நினையாய்.

7. கைகாள் கூப்பித் தொழீர்—கடி
மா மலர் தூவி நின்று
பை வாய் பாம்பு அரை ஆர்த்த பரம
கைகாள் கூப்பித் தொழீர். [னைக்

8. ஆக்கையால் பயன் என்?—அரன்
கோயில் வலம் வந்து
பூக் கையால் அட்டிப் போற்றி என்னாத
ஆக்கையால் பயன் என்? [இவ்

9. கால்களால் பயன் என்?—கறைக்
கண்டன் உறை கோயில்
கோலக் கோபுரக் கோகரணம் சூழாக்
கால்களால் பயன் என்?

10. உற்றார் ஆர் உளரோ?—உயிர்
கொண்டு போம் பொழுது
குற்றாலத்து உறை கூத்தன் அல்லால் நம
உற்றார் ஆர் உளரோ? [க்கு

11. இறுமாந்து இருப்பன் கொலோ—ஈசன்
பல்கணத்து எண்ணப் பட்டுச்
சிறு மான் ஏந்தி தன் சேவடிக் கீழ்ச்
[சென்று அங்கு
இறுமாந்து இருப்பன் கொலோ.

12. தேடிக் கண்டு கொண்டேன்—திரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என் உளே
தேடிக் கண்டு கொண்டேன்.

13. சித்தம் தெளிவீர்காள்
அத்தன் ஆரூரைப்
பத்தி மலர் தூவ
முத்தி ஆகுமே.

14. வெய்ய வினை தீர
ஐயன் அணி ஆரூர்
செய்ய மலர் தூவ
வையம் உமது ஆமே.

15. நின்று மலர் தூவி
இன்று முது குன்றை
நன்றும் ஏத்து வீர்க்(கு)
என்றும் இன்பமே.

16. அம்பொன் ஆலவாய்
நம்பனார் கழல்
நம்பி வாழ்பவர்
துன்பம் வீடுமே.

17. நீதி பேணுவீர்
ஆதி அன்னியூர்
சோதி நாமமே
ஓதி உய்ம்மினே.

18. வாழ்க அந்தணர் வானவர் ஆன் இனம்
வீழ்க தண் புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயது எல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.

III. வகுப்பு.

1. வெள்ளைக் கலைஉடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள்—வெள்ளை
அரி ஆசனத்தில் அரசரோடு என்னைச்
சரி ஆசனத்தில் வைத்த தாய்.

2. கல்லாப் பிழையும் கருதாப் பிழையும் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும்
நின் அஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாப் பிழையும்
தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்து அருள்வாய்
கச்சியேகம்பனே!

3. ஊரும் சதமல்ல உற்றார் சதமல்ல உற்றுப்பெற்ற
பேரும் சதமல்ல பெண்டீர் சதமல்ல பிள்ளைகளும்
சீரும் சதமல்ல செல்வம் சதமல்ல தேசத்திலே
யாரும் சதமல்ல நின்தாள் சதம் கச்சியேகம்பனே!

4. பித்தா! பிறைசூடீ! பெருமானே அருளாளா!
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை

வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணை நல்லூர்
அருள்துறையுள்
அத்தா! உனக்காளாய் இனிஅல்லேன் எனலாமே.

5. பொன்னார் மேனியனே! புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ் சடைமேல் மிளிர் கொன்றை
[அணிந்தவனே!
மன்னே! மாமணியே! மழபாடியுள் மாணிக்கமே!
அன்னே! உன்னை அல்லால் இனி யாரை நினைக்கேனே.

6. முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவம்ஆக்கி எனைஆண்ட
அத்தன்எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே.

7. உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்,
நிலவு உலாவிய நீர் மலி வேணியன்,
அலகில் சோதியன், அம்பலத்து ஆடுவான்,
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

8. ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ
வானாளும் செல்வமும் மண் அரசும் யான்வேண்டேன்;
தேனார்பூஞ் சோலைத் திருவேங்கடச் சுனையில்
மீனாய்ப் பிறக்கும் விதியுடையேன் ஆவேனே.

9. பட்டி மேய்ந்தோர் காரேறு பலதேவற்கோர் கீழ்க்
[கன்றாய்
இட்டீறிட்டு விளையாடி இங்கே போதக் கண்டீரோ?
இட்ட மான பசுக்களை இனிது மறித்து நீரூட்டி
விட்டுக் கொண்டு விளையாட விருந்தா வனத்தே கண்
[டோமே.

10. ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே,
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே,
கூறும்அடி யார்கள் வினை தீர்க்குமுகம் ஒன்றே,
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே,
மாறுபடு சூரரை வதைத்தமுகம் ஒன்றே,
வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே,
ஆறுமுகம் ஆனபொருள் நீஅருளல் வேண்டும்;
ஆதி அரு ணாசலம் அமர்ந்தபெரு மாளே!

11. சீராரும் தெய்வத் திருஅருளாம் பூமிமுதல்
பாராதி ஆண்ட. பதியே பராபரமே!

12. பாராயோ, என்னைமுகம் பார்த்தொருகால் என்கவலை
தீராயோ, வாய்திறந்து செப்பாய் பராபரமே!

13. எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவுநின்
தெய்வஅருள் கருணை செய்யாய், பராபரமே!

14. சங்கர சங்கர சம்போ—சிவ
சங்கர சங்கர சங்கர சம்போ.

அன்பருக்கு அன்பான மெய்யன்—ஐயன்,
ஆனந்த மோனன், அருள் குரு நாதன்,
தன்பாதம் சென்னியில் வைத்தான்,—என்னைத்
தான் அறிந்தேன், மனம் தான் இறந்தேனே.

சங்கர சங்கர—

15. என்றும் அழியும் இக்காயம்,—இத்தை
எதுக்கு மெய்யென்று இருந்தீர், உலகீர்!
ஒன்றும் அறியாத நீரோ,—யமன்
ஓலை வந்தால் சொல்ல உத்தரம் உண்டோ?

சங்கர சங்கர—

16. கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே!
காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் [கண்ணே!
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே!
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே!
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே!
நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலங்கொடுக்கும் நலமே!
எல்லார்க்கும் பொதுவில் நடம் இடுகின்ற சிவமே!
என்னரசே! யான்புகலும் இசையும்அணிந்து அருளே.

17. அம்பலத்தரசே அருமருந்தே
ஆனந்தத்தேனே அருள்விருந்தே
பொதுநடத்தரசே புண்ணியனே
புலவரெல்லாம் புகழ்கண்ணியனே
மலைதரு மகளே மடமயிலே
மதிமுக அமுதே இளங் குயிலே
ஆனந்தக் கொடியே இளம்பிடியே
அற்புதத் தேனே மலைமானே
சிவசிவ சிவசிவ சின்மயதேசா
சிவகுஞ்சித ரஞ்சித நடராஜா.

IV. வகுப்பு.

1· ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை,—தூய
உருப்பளிங்கு போல்வாள், என் உள்ளத்தின் உள்ளே
இருப்பள்; இங்கு வாராது இடர்.

2 படிக நிறமும் பவளச் செவ்வாயும்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையும்—துடியிடையும்
அல்லும்பகலும் அனவரதமும் துதித்தால்
கல்லும் சொல்லாதோ கவி.

3. மருவார் கொன்றை மதிசூடி மாணிக்கத்தின் மலைபோல
வருவார் விடைமேல் மாதோடு மகிழ்ந்து பூதப்படைசூழ
திருமால் பிரமன்இந்திரற்கு தேவர் நாகர் தானவர்க்கும்
பெருமான் கடவூர் மயானத்துப் பெரிய பெருமான்
[அடிகளே.

4. தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும்
சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்!
இம்மையே தரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலும் ஆம்
அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுறவு இல்லையே.

5. வாழ்வாவது மாயம்இது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய் செய்த பறிதான்
தாழாதுஅறம் செய்ம்மின்தடம் கண்ணான் மலரோனும்
கீழ்மேல்உற நின்றான் திருக் கேதாரம் எனீரே.

6. காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்ப்பது,
வேத நான்கினும் மெய்ப் பொருள் ஆவது
நாதன் நாமம் நமச்சிவாய வே.

7. சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழ
கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்
நற்றுணை ஆவது நமச்சிவாயவே.

8. மற்றுப் பற்றெனக் கின்றி நின் திருப்
பாதமே மனம் பாவித்தேன்,
பெற்றலும் பிறந்தேன் இனிப் பிறவாத
தன்மை வந்து எய்தினேன்,
கற்றவர் தொழு தேத்தும் சீர்க் கறை
யூரில் பாண்டிக் கொடிமுடி!
நற்றவா! உனை நான் மறக்கினும்
சொல்லும் நா நமச்சிவாயவே.

9. தோடுடைய செவியன், விடையேறி யோர்
   தூ வெண்மதி சூடிக்
காடுடைய சுடலைப் பொடி பூசி என் உள்ளங்
   கவர் கள்வன்,
ஏடுடைய மலரான் முனை நாள் பணிந்து
   ஏத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மான்,
   இவன் அன்றே?

10. அரியானை அந்தணர்தம் சிந்தையானை
   அருமறையின் அகத்தானை அணுவை யார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
   திகழ் ஒளியைத் தேவர்கள்தம் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
   கனைக்கடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
   பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே.

11. பிணக்கி லாத பெருந்துறைப் பெருமான்உன்
   நாமங்கள் பேசுவார்க்கு
இணக்கு இலாததுஓர் இன்பமே வரும்
   துன்பமே துடைத்து எம்பிரான்
உணக்கு இலாததோர் வித்து மேல்விளை
   யாமல் என் வினை ஒத்த பின்
கணக்கிலாத் திருக் கோல நீ வந்து
   காட்டினாய் கழுக் குன்றிலே.

12. வாரணம் ஆயிரம் சூழ வலம் செய்து
நாரண நம்பி நடக்கின்றான் என்று எதிர்
பூரண பொற் குடம் வைத்துப் புறம் எங்கும்
தோரண நாட்டக் கனாக் கண்டேன் தோழீ! நான்.

13· நாளை வதுவை மணம் என்று நாளிட்டுப்
பாளை கமுகு பரிசுடைப் பந்தற்கீழ்
கோள் அரி மாதவன் கோவிந்தன் என்பான் ஓர்
காளை புகுதக் கனாக் கண்டேன் தோழீ! நான்.

14. பச்சைமா மலைபோல் மேனிப் பவளவாய்க் கமலச்
[செங்கண்
அச்சுதா! அமரர் ஏறே! ஆயர்தம் கொழுந்தே! என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திரலோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகரு
[ளானே!

15. அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய்
ஆனந்த பூர்த்தி ஆகி
அருளொடு நிறைந்தது எது தன்அருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடி எல்லாம்
தங்கும்படிக்கு இச்சை வைத்து உயிர்க்கு உயிராய்த்
தழைத்தது எது மனவாக்கினில்
தட்டாமல் நின்றது எது, சமயகோடிகள் எலாம்
தம் தெய்வம் எம் தெய்வம் என்று
எங்கும் தொடர்ந்து எதிர்வழக்கிடவும் நின்றது எது
எங்கணும் பெருவழக்காய்
யாதினும் வல்ல ஒரு சித்து ஆகி இன்பமாய்
என்றைக்கும் உள்ளது எது, மேல்
கங்குல் பகல் அற நின்ற எல்லை உளது எது. அது
கருத்திற்கு இசைந்தது அதுவே;
கண்டன எலாம் மோன உரு வெளியதாகவும்
கருதி அஞ்சலி செய்குவாம்.

16 இசைந்தசூலம் கரிஉரிபோர்வையும் எழில்நீறும்
இலங்குநூலும் புலியதள் ஆடையும் மழுமானும்
அசைந்ததோடும் சிரமணிமாலையும் முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா

உசந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனே
உகந்த பாசம் கயிற்றோடு தூதுவர் நலியாதே
அசந்த போதென் துயர்கெட மாமயில் வரவேணும்
அமைந்தவேலும் புயமிசை மேவிய பெருமாளே!

17. நாத விந்துக லாதி நமோநம
வேத மந்த்ர சொரூபா நமோநம
ஞான பண்டித சாமீ நமோநம—வெகுகோடி

நாம சம்புகு மாரா நமோநம
போக அந்தரி பாலா நமோநம
நாக பந்தம யூரா நமோநம—பரசூரர்

சேத தண்டவி னோதா நமோநம
கீத கிண்கிணி பாதா நமோநம
தீர சம்ப்ரம வீரா நமோநம—கிரிராஜ

தீப மங்கள ஜோதீ நமோநம
தூய அம்பல லீலா நமோநம
தேவ குஞ்சரி பாலா நமோநம—அருள்தாராய்:

ஈதலும் பல கோலால பூஜையும்
ஓதலும் குண ஆசார நீதியும்
ஈரமும் குரு சீர்பாத சேவையும்—மறவாத

ஏழ்தலம் புகழ் காவேரி யால்விளை
சோழமண்டல மீதே மனோகர
ராஜ கெம்பிர நாடாளும் நாயக,—வயலூரா!

ஆதரம் பயில் ஆரூரர் தோழமை
சேர்தல் கொண்டவ ரோடே முனாளினில்
ஆடல் வெம்பரி மீதேறிமாகயி—லையிலேகி

ஆதியந்த உலா வாசு பாடிய
சேரர் கொங்கு வைகாவூர் நனாடதில்
ஆவிநன் குடி வாழ்வான தேவர்கள்—பெருமாளே!

V. வகுப்பு.

1. வெண்டாமரைக்கு அன்றி நின்பதம் தாங்க என் [வெள்ளை யுள்ளத்
தண்டாமரைக்குத் தகாது கொலோ? சகம் ஏழும் [அளித்து
உண்டான் உறங்க ஒழித்தான் பித்தாக உண்டாக்கும் [வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலாவல்லியே!

2. உயர்வற உயர்நலம் உடையவன் எவனவன்,
மயர்வர மதிநலம் அருளின்ன் எவனவன்,
அயர்வறும் அமரர்கள் அதிபதி எவனவன்,
துயரறு சுடரடி தொழுதெழென் மனனே.

3. வாடினேன், வாடி வருந்தினேன் மனத்தால்
பெருந்துயர் இடும்பையில் பிறந்து
கூடினேன், கூடி இளையவர் தம்மோடு
அவர்தரும் கலவியே கருதி
ஓடினேன், ஓடி உய்வதோர் பொருளால்
உணர்வெனும் பெரும்பதம் தெரிந்து
நாடினேன், நாடி நான்கண்டு கொண்டேன்,
நாராயணா என்னும் நாமம்.

4. குலம்தரும், செல்வம் தந்திடும், அடியார்
படுதுயர் ஆயின வெல்லாம்
நிலந்தரஞ் செய்யும், நீள் விசும்பு அருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்,
வலந்தரும், மற்றும் தந்திடும், பெற்ற
தாயினும் ஆயின செய்யும்,
நலந்தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்.

5. ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே! வளருதியோ, வன்செவியோ நின்செவிதான்,
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலி
[போய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டு இங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள், என்னே என்னே!
ஈதே, எந்தோழி! பரிசேலோர் எம்பாவாய்!

6. போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்,
போற்றி அருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்,
போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்,
போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்,
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறும் இணையடிகள்
போற்றி மால் நான்முகனும் காணாத புண்டரிகம்,
போற்றியாம் உய்ய ஆட்கொண்டு அருளும் பொன்
[மலர்கள்,
போற்றியாம் மார்கழி நீராடேலோர் எம்பாவாய்!

7. கூவின பூங்குயில், கூவின கோழி
குருகுகள் இயம்பின, இயம்பின சங்கம்,
ஓவின தாரகை ஒளி, ஒளி உதயத்து
ஒருப்படுகின்றது, விருப்பொடு நமக்குத்

தேவ நற்செறி கழல் தாளிணை காட்டாய்;
திருப்பெருந் துறை உறை சிவபெருமானே!
யாவரும் அறிவரியாய்! எமக்கு எளியாய்!
எம்பெருமான்! பள்ளி எழுந்தருளாயே.

8. வெள்ளந்தாழ் விரிசடையாய், விடையாய், விண்ணோர்
பெருமானே, எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தாழ் உறுபுனலில் கீழ்மேல் ஆகப்
பதைத்துருகும் அவர்நிற்க, என்னை ஆண்டாய்க்கு
உள்ளந்தாள் நின்று உச்சி அளவும் நெஞ்சாய்
உருகாதால், உடம்பெல்லாம் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால், நெஞ்சம் கல்லாம்
கண்ணிணையும் மரமாம் தீவினையினேற்கே.

9. சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியொடு வான் ஆளத் தருவர் எனும்,
மங்குவார் அவர் செல்வம் மதிப்போம் அல்லோம்
மாதேவர்க்கு ஏகாந்தர் அல்லர் ஆகில்;
அங்கம் எலாம் குறைந்து அழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்று உழலும் புலையர் எனும்,
கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பர் ஆகில்
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே,

10. அப்பன்நீ அம்மைநீ ஐயனும்நீ
அன்புடைய மாமனும் மாமியும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண் பொருளும்நீ
ஒருகுலமும் சுற்றமும் ஓரூரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய்நீ
துணையாய் என் நெஞ்சம் துறப்பிப்பாய் நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்துநீ
இறைவன்நீ ஏறுஊர்ந்த செல்வன்நீயே.

11. எத்தாயர் எத்தந்தை எச்சுற்றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்?
செத்தால் வந்து உதவுவார் ஒருவர் இல்லை,
சிறுவிறகால் தீ மூட்டிச் செல்லா நிற்பர்;
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா! என்றன்
அத்தா! உன் பொற் பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டம் கொண்டு அடியேன் என்செய்கேனே.

12. கூற்றாயின ஆறு விலக்ககிலீர், கொடுமை பல
செய்தன நான் அறியேன்,
ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும் பிரியாது
வணங்குவன் எப்பொழுதும்,
தோற்றாது என் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன், அதிகைக் கெடில
வீரட்டானத்து உறை அம்மானே!

13. வேயுறு தோளி பங்கன் விடம் உண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்து
என் உளமே புகுந்த அதனால்,
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி
சனி பாம்பு இரண்டும் உடனே
ஆசறும் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

14. ஒன்றென்று இரு, தெய்வம் உண்டு என்று இரு,
உயர் செல்வம் எல்லாம்
அன்றென்று இரு, பசித்தோர் முகம்பார்,
நல் அறமும் நட்பும்

நன்றென்று இரு, நடு நீங்காமலே
நமக்கு இட்டபடி
அன்றென்று இரு, மனமே! உனக்கே
உபதேசம் இதே.

15. பாதியாய் அழுகிய கால்கையர் எனும்,
பழிதொழிலும் இழிகுலமும் படைத்தார் எனும்,
ஆதியாய்! அரவணையாய்! என்பார் ஆகில்,
அவர் அன்றோ யாம் வணங்கும் அடிகள் ஆவார்?
சாதியால் ஒழுக்கத்தால் தக்கார் எனும்,
சதுர் மறையால் வேள்விகளால் மிக்கார் எனும்,
போதில் நான்முகன் வணங்கப் பள்ளி கொள்ளும்
பொன் அரங்கம் போற்றுதார் புலையர் தாமே.

16. இனியேது எனக்கு உன் அருள் வருமோ, எனக்கருதி
ஏங்குதே நெஞ்சம்: ஐயோ!
இன்றைக்கு இருந்தாரை நாளைக்கு இருப்பர், என்று
எண்ணவோ திடம் இல்லையே;
அனியாயமாய் இந்த உடலை நான் என்று வரும்
அந்தகற்கு ஆளாகவோ,
ஆடித் திரிந்து நான் கற்றதும் கேட்டதும்
அவலமாய்ப் போதல் நன்றோ?
கனியேனும், வறியசெங் காயேனும், உதிர்சருகு
கந்தமூலங்கள் எனும்,
கனல் வாதை வந்து எய்தின் அள்ளிப் புசித்துநான்
கண்மூடி மௌனியாகித்
தனியே இருப்பதற்கு எண்ணினேன்;எண்ணம் இது,
சாமி நீ அறியாததோ?
சர்வபரி பூரண அகண்ட தத்துவமான
சச்சிதானந்த சிவமே!

17. பூரணி புராதனி சுமங்கலை சுதந்தரி
புராந்தகி த்ரயம்பகி எழில்
புங்கவி விளங்கு சிவ சங்கரி சகஸ்ரதள
புஷ்பமிசை வீற்றிருக்கும்
நாரணி மனாதீத நாயகி குணாதீத
நாதாந்த சக்தியென்றுன்
நாமமே உச்சரித்திடும் அடியர் நாமமே
நான் உச்சரிக்க வசமோ?
ஆரணி சடைக் கடவுள் ஆரணி எனப்புகழ
அகிலாண்ட கோடி ஈன்ற
அன்னையே! பின்னையும் கன்னி யென மறைபேசும்
ஆனந்த ரூப மயிலே!
வாரணியும் இரு கொங்கை மாதர் மகிழ் கங்கை புகழ்
வளமருவு தேவை அரசே!
வரை ராசனுக்கு இருகண் மணியாய் உதித்தமலை
வளர் காதலிப் பெண் உமையே!

18. கைத்தல நிறைகனி அப்பமொடு அவல் பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவ!
கற்பக! எனவினை கடிதேகும்;
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே;
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்;
முற்பட எழுதிய முதல்வோனே!
முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா!

அத்தியர் அதுகொடு சுப்பிரமணி படும்
அப்புனம் அதனிடை இபமாகி
அக்குற மகள் உடன் அச்சிறு முருகனை
அக்கணம் மணம் அருள் பெருமாளே!

19. கருவினுரு வாகி வந்து வயதளவி லேவளர்ந்து
கலைகள்பல வேதெரிந்து மதனாலே
கரியகுழல் மாதர்தங்கள் அடிசுவடு மார்புதைந்து
கவலைபெரிதாகி நொந்து மிகவாடி
அரகர சிவாயவென்று தினமுநினை யாமல் நின்று
அறுசமய நீதி ஒன்றும் அறியாமல்
அசனம் இடுவார்கள் தங்கள்மனைகள் தலைவாசல் நின்று
அநுதினமும் நாணம் இன்றி அழிவேனோ?
உரகபட மேல்வளர்ந்த பெரிய பெருமாள் அரங்கர்
உலகளவு மால் மகிழ்ந்த மருகோனே!
உபயகுல தீப துங்க விருதுகவி ராஜசிங்க
உறை புகலியூரில் அன்று வருவோனே!
பரவைமனை மீதில் அன்று ஒருபொழுது தூதுசென்ற
பரமன் அருளால் வளர்ந்த குமரேசா!
பகை அசுரர்சேனை கொன்று அமரர்சிறை மீளவென்று
பழனிமலை மீதில் நின்ற பெருமாளே!

அநுபந்தம்.

1. உருகு மடியா ரள்ளூற
உள்ளே யூறுந் தேன்வருக!

உண்ணத் தெவிட்டாச் சிவானந்த
வொளியே வருக! புலன்வழிபோய்த்

திருகு முளத்தார் நினைவினுக்குச்
சேயாய் வருக! வெமையாண்ட

செல்வா வருக! வுமையீன்ற
சிறுவா வருக! வினைவிழியால்

பருகு மமுதே வருக! வுயிர்ப்
பைங்கூழ் தழைக்கக் கருணைமழை

பரப்பு முகிலே வருக! நறும்
பாகே வருக! வரைகிழித்த

முருக வேட்கு முன்னுதித்த
முதல்வா வருக! வருகவே!

மூரிக் கலைசைச் செங்கழுநீர்
முனியே வருக! வருகவே!

2. இழுமென் அருவி சொரியும் இமய
முதல்வி புதல்வன் வருகவே
இயலு நடையும் வடிவும் அழகும்
எழுத அரியன் வருகவே

ஒழுகு கருணை முழுகு கமல
வதனன் வருக வருகவே
ஒருவன் இருவர் ஒருகை தொழுநல்
உபய சரணன் வருகவே

விழுது விடுவெண் நிலவு பொழியும்
நகையன் வருக வருகவே
விளரி பயிலும் அளியு ளிமிறும்
விரள குரவன் வருகவே

மழலை முதிர முதிரு மதுர
வசனன் வருக வருகவே
வளமை தழுவு பரிதி புரியின்
மருவு குமரன் வருகவே.

3. பெருந்தேன் இறைக்கு நறைக்கூந்தற்
பிடியே வருக முழுஞானப்
பெருக்கே வருக பிறைமௌலிப்
பெம்மான் முக்கட் சுடர்க்குஇடுநல்

விருந்தே வருக மும்முதற்கும்
வித்தே வருக வித்தின்றி
விளைக்கும் பரமா னந்தத்தின்
விளைவே வருக பழமறையின்

குருந்தே வருக அருள்பழுத்த
கொம்பே வருக திருக்கடைக்கண்
கொழித்த கருணைப் பெருவெள்ளம்
குடைவார் பிறவிப் பெரும்பிணிக்கோர்
மருந்தே வருக பசுங்குதலை
மழலைக் கிளியே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே.

4. தளவு காட்டும் வெண்முறுவல்
தவழுந் துவர்வாய் யசோதை பச்சைத்
தழைக் கூரையினின் முடைப்பகுவாய்த்
தடவுத் தாழி நெட்டுறியின்
அளவு காட்ட நிமிர்ந்து வெண்ணெய்
அருந்து மளவில் அவளதுகண்
டடிக்குந் தாம்புக் கஞ்சிஅமு
தரையி லார்க்கு மணிபொத்தித்
துளவு காட்டும் திருமேனி
துவளத் திருத்தாள் முன்செல்லத்
துணைக்கட் கமலம் பின்கிடப்பத்
துண்ணென் றோடுஞ் சிறுவா! நின்
களவு காட்டே மெம்மிரண்டு
கண்ணுங் களிக்க வருகவே!
கருணை சுரந்து மடைதிறந்த
கண்ணா வருக! வருகவே!

உ

கடவுள் துணை

கடவுள் வணக்கச் செய்யுட்கள்

உரைக் குறிப்புகள்

I, II வகுப்புகள்

1 முதல் 12 வரை திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச் செய்த திருவங்கமாலை. நம் உடம்பில் உள்ள தலை முதல் ஒவ்வொரு அவயவத்தையும் பார்த்து நீ கடவுளைத் தொழுவாய் எனச் சொல்லுதல் போலத் துதி செய்வது.

121225

1. தலையே நீ பரமேசுவரனை வணங்கு.
(தலையாலே பலி தேரும் தலைவன்=தலை யோட்டிலே பிச்சை யேற்கும் ஈசன்.—பிச்சாடனார்).

2. கண்களே நீங்கள் சிவபெருமானைக் காணுங்கள்.
(கடல் நஞ்சு உண்ட கண்டன்=சமுத்திரத்திலே எழுந்த விஷத்தை உண்டு அதைக் கழுத்திலே நிறுத்தியவர்.—திருநீலகண்டர்).

3. செவிகளே நீங்கள் சிவபிரான் திருப்புகழை எப்போதும் கேளுங்கள்.

4. மூக்கே நீ ஈசுவரனைப் பற்றி முரல்.
(முதுகாடு=எல்லா உலகமும் சம்மாரம் செய்த காலத்தில் உள்ள மயானம். மங்கை மணாளன்—பார்வதீபதி. முரல்வது—மூக்கினால் செய்யப்படும் ஓசை.)

5. வாயே நீ மகாதேவனை வாழ்த்து.
(சிவபெருமான் யானை யுரி போர்த்து, முதுகாட்டிலாடுபவர்.)

6. மனமே நீ யீசனை நினைத்துக்கொண்டிரு.
(சடாதரன்,—மலைமங்கை மணாளன்—பார்வதீபதி.)

7. கைகளே புஷ்பங்களைத் தூவி பரமேசுவரனைக் கும்பிடுங்கள்.
(விஷப்பையையுடைய வாயோடுங் கூடிய பாம்பை இடுப்பிலே தரித்தவர்—நாகாபரணர்.)

8. ஈசுவரன் கோயிலைச் சுற்றிவந்து பூக்களை இட்டு அவரைத் தொழாத உடம்பால் பிரயோசனம் இல்லை.

9. ஈசுவரன் கோயிலைச் சுற்றிவராத கால்களால் பயன் இல்லை. (கோகரணம்—ஒரு சிவ க்ஷேத்திரம்.)

10. நமக்கு உயிர்போகும் காலத்தில் ஈசுவரனை அல்லாமல் வேறு பந்துக்கள் இல்லை.
(குற்றாலம்—ஒரு க்ஷேத்திரம். இது திருநெல்வேலி ஜில்லாவில் உள்ளது.)

11. ஈசுவரனுடைய அடியார்களுடன் கூடி அவர் பாதத்தின் கீழ் இருப்பது பெருமை.

12. சிவ பெருமானை என்மனதிலேதியானித்து அவரைக் கண்டு கொண்டேன். (அடிமுடி தேடிய ஐதீகம்.)

இனி 13 முதல் 17 வரை திருஞான சம்பந்த சுவாமி கள்: திருவிருக்குக்குறள்.

13 ஈசனை பக்தியோடு தொழுதால் முக்தி கிடைக்கும். (திருவாரூர் ஈசன்.)

14. ஈசனை புஷ்பம் இட்டு தொழுதால் உலகம் உம்முடையது ஆகும்.

15. ஈசனை எத்தினுல் (துதித்தால்) எப்போதும் இன்பம் உண்டாகும். (முது குன்றம்—விருத்தாசலம்.)

16. ஈசன் பாதத்தை நம்பிவாழ்பவர்களுக்கு துன்பம் நீங்கும். (ஆலவாய்—மதுரை.)

17. ஈசனுடைய நாமத்தைச் சொல்லி நல்வழி அடையுங்கள். (திரு அன்னியூர்.)

18. திருஞானசம்பந்தர்: திருப்பாசுரம்.

அந்தணர், தேவர், பசுக்கள் வாழக்கடவர்; மழை பெய்யக்கடவது; அரசன் மேன்மையடைக; கெடுதி எல்லாம் ஒழிய வேண்டும்; ஈசன் நாமமே பரவ வேண்டும்; உலகம் துன்பம் நீங்கக்கடவது.

III. வகுப்பு

1, காளமேகப் புலவர்: வெண்பா.—சரசுவதி துதி.

வெள்ளை வஸ்திரத்தையும், வெள்ளை ஆபரணங்களையும் அணிந்து வெண்டாமரையில் இருக்கும் சரஸ்வதி தேவியாகிய தாயார் என்னை மகா ராஜர்களோடு சமானமான ஸ்தானத்தில் வைத்தவள்.

2. பட்டினத்தார் பாடல்.—

கச்சி ஏகாம்பர நாதரே, அடியேன் செய்யக்கூடிய எல்லாப் பிழைகளையும் பொறுத்துக்கொண்டு கருணை செய்வீர்.

3. ஒருவனுக்கு ஊர், பேர், பந்துக்கள், மனைவி, மக்கள், செல்வம் முதலிய யாவும் நித்திய மல்ல, உன்பாதம் தான் நித்தியம்.

4. ஸ்ரீ சுந்தர மூர்த்தி சுவாமிகள்: திருவெண்ணைநல்லூர் தேவாரம்—குரு அருள்.

திரு அருட்டுறையில் எனக்கு அருள் செய்த ஐயனே, பித்தனே, பெருமானே, உனக்கு எக்காலத்தும் நான் அடிமை என்பது தெரிந்து உன்னை எப்போதும் மறக்காமல் நினைக்கின்றேன். உனக்கு நான் இனி அடிமை அல்ல என்று சொல்ல முடியுமா? முடியாது.

5. ஷை திருமழபாடித் தேவாரம்—பொன் போன்ற திருமேனி யுடையவரே, புலித்தோலை உடுத்தவரே, மழபாடி மாணிக்க நாதரே, உம்மை அல்லாமல் வேறு யாரையும் நான் நினைக்க மாட்டேன்.

6. மாணிக்கவாசக சுவாமிகள்—திருவாசகம்.

மூர்க்கர்களோடு சேர்ந்து திரிகின்ற என்னை என் பழைய கர்மங்களை போக்கி ஈசுவரனுடைய தன்மையைக் கொடுத்து சிவபிரான் ஆட்கொண்டருளிய பாக்கியம் என்னைப்போல வேறு யாருக்குக் கிடைக்கும்.

7. ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகள்—பெரிய புராணம் துதி.

உலகத்திலுள்ள சகல ஜீவராசிகளும் அறிந்து புகழ்வதற்கு அரிதானவர், சந்திரனையும் கங்கையையும் சடையில் தரித்துக் கொண்டிருப்பவர், அளவில்லாத

சோதி சொரூபத்தை உடையவர். திரு அம்பலத்தில் ஆனந்த நடனம் ஆடுபவர், அன்னவருடைய திருப் பாதங்களை வாழ்த்தி யாம் வணங்குவோம்.

8. குலசேகராழ்வார்—நாலாயிரப் பிரபந்தம்—பெருமாள் திருமொழி.—

குறையாத செல்வத்துடன் தேவ அரம்பையர் சூழ்ந்திருக்க தேவலோகத்திலே இந்திரன் பதவியும், பூமியிலே அரசன் பதவியும் எனக்குக் கிடைப்பதை நான் விரும்பமாட்டேன். திருவேங்கடத்தில் ஒரு சுனையில் மீனாய் பிறக்கும் ஒரு வாழ்வே நான் விரும்பினது. (காரணம்—ஈசனுடைய திரு அருளுக்குச் சமீபத்தில் என்றும் இருக்கின்ற நித்ய சுகம் மேலானதாகையால்.)

9. ஸ்ரீ ஆண்டாள்—ஸ்ரீ கிருஷ்ணன் பசுக்களை மேய்த்துக்கொண்டு போனதைப் பார்த்தீரோ? என்றதற்கு, பசுக்களுக்கு நீரூட்டிக்கொண்டு போனதை பிருந்தாவனத்திலே கண்டோம், என்றது.

10 இராமலிங்க சுவாமிகள் பாடல்—நல்லவர் கெட்டவர் என்ற இரு திறத்தார்களுக்கும் நன்மையே செய்வீர், பொதுவில் நடனம் ஆடுகின்றீர், என் பாட்டையும் ஏற்றுக்கொண்டு அருளுவீர்

11. சிவ நாமாவளி.—ஈசன் நாமங்களைக் குறிக்கின்றன.

12. அருணகிரிநாதர்—திருப்புகழ்

ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு ஆறு திருமுகங்கள் உண்டு அவைகள் என்னென்ன செய்யும் எனில், ஒரு முகம் மயிலேறி விளையாடும், ஒன்று ஈசனுடனே ஞானம் பேசும், ஒன்று பக்தர்கள் குறைகளைப் போக்கும், ஒன்று கிரவுஞ்ச மலையைப் பிளந்த வடிவேலைக்

கொண்டு நிற்கும், ஒன்று சூரனை வதைக்கும், ஒன்று வள்ளிநாயகியை மணக்கும், ஆக அவ் ஆறு திருமுகங்களைக் கொண்டு அருணாசலத்தில் எழுந்தருளின பெருமாளே, நீ எனக்கு அருள் செய்ய வேண்டும்.

13 தாயுமானவ சுவாமிகள்—பராபரக்கண்ணிகள்.—
உலகம் முழுதும் ஆண்ட தலைவர், அருளாளர்.

14. ஈசனே! ஒருமுறை என் முகத்தைப் பார்த்து என் கவலைகளை தீர்க்க மாட்டீரா ?

15. மற்ற உயிர்களை என் உயிர் போல் பாவிக்கும் எண்ணத்தை எனக்கு அருள் செய்யவேண்டும்.

16. ஆனந்தக்களிப்பு—என் குருநாதன் என்னை ஆட்கொண்டான். உடனே என்னை இன்னான் என்று நான் அறிந்து கொண்டேன்.—
அதாவது ஆத்மஞான முண்டாயிற்று. நான் என்னும் ஆணவம் ஒழிந்தது.

17. இவ்வுடம்பு எப்போதாவது ஒரு நாள் கட்டாயமாய் இறக்கும், இதை உண்மை என்று ஏன் இருந்தீர்கள் சாவு வந்த காலத்தில் உங்களால் என்ன பதில் சொல்ல முடியும்.

IV வகுப்பு

1. கம்பர்—சரசுவதி அந்தாதி—துதி
அறுபத்துநான்கு கலைஞானங்களையும் எனக்கு அறிவிக்கின்ற பளிங்கு போல வெண்ணிறத்தையுடைய சரசுவதி தேவியாகிய என் தாய் எப்போதும் என் மனத்தில் இருப்பதால் எனக்கு யாதொரு துன்பமும் வராது.

2. பளிங்கு போன்ற வெண் நிறமும், பவளம் போன்ற சிவந்த வாயும், தாமரைபோன்ற மெதுவான கையும், உடுக்கைபோன்ற இடையும் உடையவராகிய சரசுவதி தேவியாரை இரவும் பகலும் எப்போதும் துதித்தால் அறிவில்லாததாகிய கல்லும் கவி சொல்லும்.

3. சுந்தர மூர்த்திகள் தேவாரம்: திருக்கடவூர் மயானம்: அந்தத் தலத்தில் ஈசன் பார்வதி தேவியாரோடு ரிஷப வாகனத்தில் ஆரோகணித்து வருவார் (அவரைக் கண்டு தரிசியுங்கள்.)

4. சுந்தரமூர்த்திசுவாமிகள்—திருப்புகலூர்த் தேவாரம்.- புலவர்களே, அழிந்து போகக்கூடிய மனிதர்களைப் பற்றிப் பாடாதீர்கள். ஆனல் ஈசனைப்பாடினீர்களானல் உங்களுக்கு இந்த உலகத்தில் அன்னவஸ்திரத்துக்கு குறைவில்லாமல் தருவார். இவ்வுலகத்தை விட்டபின் சிவலோகத்தையும் தருவார். இதில் யாதும் சந்தேகம் இல்லை.

5. சுந்தரமூர்த்தி சுவாமிகள்—ஸ்ரீ பஞ்சாட்சரத்தின் மகிமை.—

சிவபிரான் திரு நாமமாகிய ஸ்ரீ பஞ்சாட்சரமானது தன்னை உள்ளன்போடு உருகி ஓதினவர்களை நல்வழியிலே செலுத்தும். அது தான் வேதத்தில் சொல்லப் பெற்ற உண்மைப் பொருள்.

7. ஸ்ரீஅப்பர் சுவாமிகள்—ஸ்ரீபஞ்சாட்சரத்தின்மகிமை.- பரமேசுவரனுடைய அழகிய திருவடிகளைத் தொழுவார்களானல், அவர்களைக் கல்வில் கட்டிக் கடலில் போட்டு விட்டாலும் நல்ல துணையாக ஸ்ரீபஞ்சாட்சரம் உதவி செய்யும்.

(இது அப்பர் சுவாமிகளைச் சமணர் கல்லிலே கட்டிக் கடலில் போட்ட காலத்தில் அருளிச்செய்தது.

8. சுந்தர மூர்த்திகள்.—ஸ்ரீ பஞ்சாட்சரத்தின் மகிமை—
கொடுமுடி ஈசனே, எனக்கு யாதொரு பற்றுமில்லாமல் உன் பாதமே தியானிக்கிறேன். அதனால் இனி ஜன்மம் எடுக்காத தன்மை வந்தது; உன்னை என்மனம் மறந்தாலும் சொல்லும்பழக்கத்தினால் என் நாவானது எப்போதும் பஞ்சாட்சரத்தைச் சொல்லிக்கொண்டிருக்கும்.

. திருஞானசம்பந்த சுவாமிகள்—குருவருள்
பரமேசுரன் என் மனதை முழுதும் கொள்ளைகொண்டு கவர்ந்தார்; (அதாவது என் மனம் முழுதும் பரமேசுவரன் மேலே சென்றது) அவர் யாரென்றால் ஸ்ரீ காழியில் (பிரமாபுரம்) எழுந்தருளும் பிரான்; இதோ நிற்கின்றாரே இவர் தான்.

10. அப்பர் சுவாமிகள்—திருத்தாண்டகம்—சிதம்பரம்.
சிதம்பரத்திலே (பெரும்பற்றப்புலியூர்) எழுந்தருளி இருக்கும் ஈசுவரனைத் தோத்திரம் செய்யாமல் கழிக்கும் நாள்கள் எல்லாம் நாம் பிறந்த நாள்கள் ஆகமாட்டா. அதாவது பிறவி எடுத்த காரியத்தைச் செய்யாமல் வீணாய் காலம் கழித்த நாள்கள் ஆகும்.

11. ஸ்ரீமாணிக்கவாசகர்-திருவாசகம்-கழுக்குன்றப்பதிகம்.
திருப்பெருந்துறைப் பெருமானே, உனது திருநாமங்களைச் சொல்பவர்களுக்கு இன்பமேவரும், ஏனென்றால் உன் திருநாமங்களைச் சொல்லிய எனக்கும், திருக்கழுக் குன்றத்திலே உன் அழகிய குருமூர்த்தியாயகி வடிவத்தைக் காட்டி அருளினாய்.

12. ஸ்ரீ ஆண்டாள்—நாச்சியார் திருமொழி.
தோழீ, ஆயிரம் யானைகள் சூழ ஸ்ரீகிருஷ்ணன் பவனி வந்தபோது பூரண கும்பங்கள் வைத்து தோரணங்கள் கட்டி எதிர்கொண்டதாக நான் கனாக் கண்டேன்.

13. தோழீ, கலியாணத்துக்கு நாள் நாளைக்கு என்று நிச்சயித்ததாகவும் அன்று மணப்பந்தலில் ஸ்ரீகிருஷ்ணன் புகுந்ததாகவும் கனாக் கண்டேன்.

14. தொண்டரடிப்பொடியாழ்வார்—திருமாலை—ஸ்ரீரங்கம். "அச்சுதா, கோவிந்தா," என்று கூவித் துதிக்கும் இந்தச் சுவையைத் தவிர தேவேந்திர போகம் வந்தாலும் எனக்கு வேண்டியதில்லை.

15. தாயுமான சுவாமிகள்—பரம்பொருள் வணக்கம்.

எங்கு பார்த்தாலும் பூரணமாய் ஆனந்தமாய் அருளுடனே நிறைந்து நிற்பதும், எல்லா உயிர்களுக்குள்ளும் உயிர்க்கு உயிராய்த் தழைத்ததும், மனத்தால் உணரவும் வாயால் சொல்லவும் படாமல் நிற்பதும், எல்லாச் சமயங்களால் பேசப்படுவதும், என்றைக்கும் உள்ளதும், முக்காலத்தையும் கடந்து நிற்பதும் எந்தப் பரவஸ்துவோ அதுவே நம் மனத்துக்கு இசைந்ததுவாம். எங்கே பார்த்தாலும் அப் பரவஸ்துவின் திருவுருவமாக நாம் நினைத்து துதிப்போமாக.

16. அருணகிரிநாத சுவாமிகள் திருப்புகழ்—சுப்பிரமணியக் கடவுளே, சிவபெருமானுக்கே குரு மூர்த்தமாய் எழுந்தருளியவரே, சூரபத்மனை அவன் வம்சத்தோடு கொலைத்தவரே, யமன் என்னை இம்சிக்காமலும் நான் அயர்ந்திருக்கையில் என் துக்கம் போகவும் மயில் மீது எழுந்தருளி வந்து என்னைக் காக்கவேண்டும்.

17. அருணகிரிநாத சுவாமிகள் திருப்புகழ்—ஸ்ரீமத் சுந்தர மூர்த்திகளோடு கைலாசத்துக்கு குதிரைமீது சென்று ஆதியுலா பாடியருளிய சேரமான் பெருமாள் நாயனாருடைய ஆட்சியிலே சேர்ந்த கொங்குநாட்டில் வைகாவூரிலே அடங்கிய பழனித் தலத்திலே எழுந்தருளி இருக்கும் பெருமானாகிய சுப்பிரமணிய சுவாமியே!

உம்மை நமஸ்கரிக்கிறேன். எனக்கு அருள் புரிய வேண்டும்.

V. வகுப்பு

1. குமரகுருபர சுவாமிகள்—சகல கலாவல்லி மாலை.

பிரமதேவருடைய தேவியாகிய சரசுவதி யம்மையே, வெள்ளைத் தாமரையே யல்லாமல் நீ வீற்றிருக்க என் வெள்ளை அறிவுடைய இருதயமும் தகாத இடமாகுமோ? (அதுபோல் இதுவும் வெள்ளையாதலால் நீ இருக்கத்தகும், நீ வந்து என் இருதயத்தில் நீங்காமல் தங்கவேண்டும். வெள்ளையுள்ளம்-அறிவில்லாதஉள்ளம்)

2. நம்மாழ்வார்—திருவாய்மொழி.

எவன் உன்னதமான நலத்தை உடையவனோ, எவன் ஞானத்தை அருளினவனோ, எவன் தேவர்கள் தலைவனோ அவனுடைய குற்றமற்ற பிரகாசமான திருவடியை வணங்கி ஈடேறுவாய் மனமே. தொழுதெழல்-தொழுது எழுக.

3. திருமங்கை யாழ்வார்—பெரிய திருமொழி.

உலக இன்பங்களில் அலைந்து உளைந்து கெட்டு ஓடிப்போய் அவை எல்லாம் அழிந்துபோகக் கூடியவை என்று கண்டு, ஞானம் என்றதை அறிந்து அதை நாடி அதனால் நாராயணா என்னும் திருநாமத்தைக் கண்டு கொண்டேன்.

4. நாராயணா என்ற திருநாமம் உச்சரித்தால் குலம் செல்வம் இவைகளைக் கொடுக்கும், பக்தர்களுடைய துன்பங்களைப் போக்கும், சுவர்க்கத்தைக் கொடுக்கும். அருளையும் வைகுண்டத்தையும் கொடுக்கும். நம்மைப் பெற்ற தாயைக்காட்டிலும் அதிக நன்மைகளைப் புரியும். அத்திருநாமத்தை நான் கண்டுகொண்டேன்.

5. மாணிக்கவாசக சுவாமிகள் — திருவாசகம் — திருவெம்பாவை,

மார்கழி மாசத்தில் விடியற்காலையில் நீராடிச் சுவாமியைத் தோத்தரிக்கும் பெண்கள் ஒருவரை ஒருவர் எழுப்பி ஸ்நானத்திற்குக் கூடிச்செல்கின்ற பாவனையிற் சொல்லப்பெறுகின்றது. ஒரு பெண் வந்து தூங்கிக் கொண்டிருந்த தோழி ஒருத்தியைப் பார்த்து சொல்லியதாகக் கருத்து உள்ளது இப்பாட்டு.

எம் தோழியே, நாங்கள் பரமேசுரனைப் பாடுவதைக் கேட்டும் இன்னும் தூங்குகிறாயோ, உன் காது கேட்காததோ, நாங்கள் சிவபெருமானைப் பாடிய ஒலி வீதியெல்லாம் கேட்டும் கூட இத்தோழி தன் படுக்கையில் புரண்டு மெய்மறந்து கிடந்தாள் என்ன அதிசயம்!

6. கடைசியில் அப்பெண்கள் எல்லாம் சேர்ந்து சிவபெருமானைத் துதி செய்து நீராடச் செல்லும்போது பாடுவது—

சிவபெருமானே, உன் பாதங்களைத் தொழுகிறோம். அவை எல்லாவற்றிற்கும் முதலும் முடிவும் ஆவன. எல்லாவற்றையும் படைப்பன, வளர்ப்பன. அழிப்பன, எங்களுக்குக் கருணை புரிவன. அவற்றை நாங்கள் தொழுது மார்கழி நீர் ஆடப் புகுவோமாக.

7 திருவாசகம்—திருப்பள்ளி யெழுச்சி.

விடியற் காலையில் சுவாமியைப் பள்ளியிலிருந்து எழுப்புவதாகப் பாவித்துச் செய்யும் பிரார்த்தனை. இது விடியற் காலத்தை வர்ணிக்கிறது.

குயில்கள் கூவின, கோழிகள் கூவின, நட்சத்திரங்கள் மறைந்தன, சூரியோதயம் சமீபிக்கிறது. திருப்பெருந்துறை ஈசனே பள்ளி யெழுந்தருளுவாயாக.

8. திருவாசகம் — திருச்சதகம்.

சிவபெருமானே, உன் பெயரைக் கேட்ட மாத்திரத்திலே மனம் உருகும்படியான சிறந்த அடியார்கள் இருக்கவும் எளியவனாகிய என்னை ஆட்கொண்டு அருளிய உன் பெருந்தன்மையைக் கண்டு நான் உடம்பெல்லாம் உருகி கண்ணீர் சொரிய உள்ளவன்; அப்படி இருக்க என்மனம் கல்போலவும் கன்மாம் போலவும் இளகாமல் இருக்கிறதே! (என் செய்வேன்)

9. திருநாவுக்கரசு சுவாமிகள்—தனித்திருத்தாண்டகம் —

எவ்வித ஐசுவரியங்களையும் எமக்குக் கொடுக்கக்கூடியவராயிருந்தாலும் சிவபெருமானுக்கு அன்பர் அல்லாதவர்களாயிருந்தால் அழியக்கூடிய அவர்கள் செல்வத்தை நாம் மதிக்கமாட்டோம், மிகுந்த நோயுடைய புலையராயிருந்தாலும் சிவபிரானுக்கு அன்பர்களாயிருந்தால் நாங்கள் கடவுளாகப் பாராட்டுவோம்.

10. ஷை

ஈசனே (ரிஷபவாகனாரூடர்) எனக்கு அப்பன், அம்மை, மாமன், மாமி, மனைவி, மக்கள், சுற்றத்தார் எல்லாம் நீயே: பொன், மணி, வீடு, விளைநிலம் முதலிய எல்லாப் பொருளும் நீயே; எனக்கு எஜமானனும் நீயே.

11. ஷை —திருவானைக்காப் பதிகம்.

தாய், தந்தை முதலிய சுற்றத்தார் நாம் இறக்குங்காலத்தில் தீ மூட்டி விட்டுச் செல்வாரே ஒழிய ஒரு உதவியும் புரிய அவர்களால் முடியாது. ஈசனே உன் அழகிய பாதம்தான்கதி. அதை அடைந்தாலல்லது என்ன செய்வேன்.

12. ஷை — அதிகை வீரட்டானத்துப் பதிகம்—குரு அருள்.

(சைவ சமயத்திலே பிறந்தும் சமணத்திலே புகுந்த நாயனாரைச் சூலைநோய் தந்து ஆட்கொண்டருளிய

போது பாடியது.) ஈசனே, உம்முடைய திருவடிகளை எப்போதும் தொழுது கொண்டிருக்கிறேன், இந்த சூலை நோய்குடலைப் பிடித்து சகிக்கமுடியாத துன்பம் செய்கிறது, இதை அனுபவிக்க என்ன கொடுமை செய்தேனே தெரியாது. இதைப் போக்கி அருள்வீராக.

13. திருஞானசம்பந்தர்— தேவாரம்— கோளறுபதிகம்.

சிவபெருமான் எனது உள்ளத்திலே வீற்றிருக்கின்ற காரணத்தினலே சூரியன் முதலான நவக்கிரகங்களும் நன்மையே செய்யும்; சிவன் அடியார்கள் எல்லாருக்கும் அவைகள் மிகவும் நன்மையே புரியும்.

14. பட்டினத்தார் பாடல்—

மனமே உனக்கு நான் செய்யும் உபதேசம் என்னவெனில், ஒரே தெய்வம் உண்டு, செல்வம் அழிந்து போகத்தக்கது, பசித்தவர்களுக்கு அன்னம் இடு, தர்மமும் சினேகமும் நல்லவை, நடுநிலைமை கெடாமல் நமக்கு கொடுத்திருக்கிறபடி இரு.

15. பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் — அஷ்டப்பிரபந்தம்; திருவரங்கக் கலம்பகம்.

மிகுந்த நோயும் பழி தொழிலும் உடைய தாழ்ந்த குலத்தவர்களாயினும் மகா விஷ்ணுவே என்று துதிப்பார்கள் ஆனல் அவர்களை நாம் வணங்குவோம். உயர்ந்த குலமும் மிகுந்த செல்வமும் உடையவர்களாயிருந்தாலும் மகாவிஷ்ணுவுக்கு அடியவர்கள் அல்லாதாரை நாம் மதிக்கவே மாட்டோம்.

16. தாயுமான சுவாமிகள்—

சிவபெருமானே, எனக்கு உன் அருள் என்றைக்கு வரும் என்று என்மனம் ஏங்குகிறது; பின்னே அடைந்து கொள்ளலாம் என்றால் இன்றைக்கு இருப்பவர் நாளைக்கும் இருப்பர் என்று சொல்ல நிச்சயமில்லை;

அப்படி ஒருவேளை நாளைக்கே மரணம் வந்துவிட்டால் நான் இதுவரை படித்ததும் கேட்டதும் எல்லாம் வீணாய்ப்போகும்படி இந்த உடம்பை எமனிடம் ஒப்புவித்து விடவேண்டிவரும்; ஆகையாலே உன் அருள் இப்போதே கிடைக்கும்படியாக. உலகபந்தம் எல்லாம் நீங்கிப் பசிதாகம் என்ற கவலை இல்லாமல் பசிவந்தால் சருகு, கிழங்கு, கனி முதலியவை கிடைத்தவற்றைப் புசித்து தனியே இருந்து உன்னைத் தியானம் செய்து கொண்டு இருக்க எண்ணினேன், இது உனக்குத் தெரியாத விஷயமோ?

17. பார்வதி யம்மையே, பூரணி, புராதனி......நாரணி என்று பலவாறாக உனது திருநாமங்களைச் சொல்லிக் கொண்டு இருக்கும் அன்பர்களுடைய நாமத்தைக் கூட சொல்ல என்னால் முடியாது. (எனவே உன் பெருமை எவ்வளவு பெரியது.)

18. அருணகிரிநாதர்—திருப்புகழ்—விநாயக ஸ்தோத்திரம்.

விநாயகரைத் தொழுதால் வினைகள் உடனே போகும். அவ்விநாயகரை புஷ்பங்கள் இட்டுத் தொழுகிறேன். அவர் மேருகிரியில் பாரதம் எழுதியவர், சிவபிரான் தேரின் அச்சை முறித்தவர், யானை ரூபத்துடன் சென்று சுப்பிரமணிய சுவாமிக்கு வள்ளியை மணம் புரியச் செய்தவர்.

19. திருப்புகழ்—சுப்பிரமணியர் துதி—

திருமால் மருமகனே, சம்பந்த மூர்த்தியாய் அவதரித்தவனே, ஈசன் குமாரனே, அசுரரை வென்று சுரரைச் சிறை மீட்டுப் பழனியில் எழுந்தருளியிருக்கும் சுப்பிரமணியக் கடவுளே, என் தாய் வயற்றில் உற்பத்தியாகிப் பிறந்து வளர்ந்து படித்துப் பெண்களை மணந்து கவலை கொண்டு ஈசனை நினையாமல் நீதிகள் தெரியா

மல் சாதம் இடுபவர்கள் வீட்டில் புகுந்து வெட்கம் கெட்டு அழிந்து போகிறேனே. என்மீது அருள் புரிவாயாக.

அநுபந்தம்

1. சிவஞான சுவாமிகள் — செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ்.

கலைசை விநாயகரே, உம்மை நினைந்து உருகும் அடியார் மனத்திலே இனித்து ஊறும் தேன் போன்றவரே, உலக ஆசையிலே மனதைச் செலுத்துபவருக்குக் கிடைக்காதவரே, எங்களை ஆட்கொண்ட செல்வரே, அழகுடையவரே, பார்வதி தேவி புதல்வரே, முருகருக்கு மூத்தவரே வருக ! வருக !

2. குமர குருபர சுவாமிகள்—வைத்தீசுவரன் கோவில்—முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ்.

வருகைப் பருவம்.—(சுவாமியைப் பிள்ளையாகப் பாவித்து தாய்மார் வா வா என்றழைப்பது போல் பாடுவது) சுவாமியே, பார்வதி தேவியார் புதல்வரே, அழகுடையவரே, கருணை கூர்ந்த முகத்தையுடையவரே, பரமேசுவரராலும் வந்திக்கப்பெற்றவரே, பிரகாசிக்கின்ற இளநகையுடையவரே, குரு மூர்த்தியே வருக! வருக!

3. மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழ்.

மலையத்துவச பாண்டியன் வரம் கிடந்து பெற்ற வாழ்வே, கிளியையும் இளம் பெண்யானையையும் போன்றவரே, ஞானசொரூபியே, சோமசுந்தரக்கடவுள் நோக்கம் பெற்றவரே, திரிமூர்த்திகளுக்குக்

காரணமானவரே, நித்யமான ஆனந்த சொரூபியே, வேதங்களின் மூலப்பொருளே, அருள் உடையவரே, உமது நோக்கம் பெற்றவர்களுடைய பிறவி நோய் நீக்கும் மருந்து போன்றவரே, வருக! வருக!

4. வேப்பத்தூர்ச் சங்கத்துப் புலவர்கள் — திருமாலிருஞ்சோலை—அழகர் பிள்ளைத்தமிழ்—

அருள் வண்ணனாகிய கண்ணா, யசோதையின் வீட்டில் கூரையிலிருந்து தொங்கும் உறியின் கீழ் நிமிர்ந்து வெண்ணெய் எடுத்து உண்ணும்போது அவள் அதைப்பார்த்து உன்னை அடிக்க வந்த தாம்பைக் கண்டு பயந்து உன் பாதங்கள் முன் ஓட இரண்டு கண்களினாலும் பின்னால் திரும்பித் திரும்பிப் பார்த்த வண்ணமாய் ஓடும் சிறுவனே, உன் களவுச் செயலைக் காட்டிக்கொடுக்க மாட்டோம் எங்கள் கண்கள் களிக்கும் வண்ணம் நீ வருவாயாக.

உரைக் குறிப்புகள்

முற்றிற்று

சிவகாமி வி[illegible] அச்சுக்கூடம் சென்னை.

கோவைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

க. சுந்தரமூர்த்தி சுவாமிகளும் கொங்கு நாடு
(ஆசிரியர் C. M. இராமச்சந்திரஞ் செட்டியார், B.
B. L., F. M U.) விலை அணா

உ. கடவுள் வணக்கச் செய்யுட்கள் (உ-ம் பதிப்பு
(சிறுவர் சிறுமியர் பாராயணத்துக்காக C. K. சுப்
மணியமுதலியார், B.A., F.M.U., C. M. இராமச்ச
ரஞ் செட்டியார், B.A., B.L., F.M.U. இவ்விருவர்க
லுந் திரட்டப்பட்டது. விலை அண

ங. மாணிக்கவாசகர் அல்லது 'நீத்தார் பெருமை
படங்களுடன் (திருக்குறள் 'நீத்தார் பெருமை' எ
அதிகாரத்திலுள்ள பத்துக் குறட்பாக்கட் கேற்
பாகுபடுத்தி அமைக்கப்பெற்றது. ஆசிரியர், வக்
C. K. சுப்பிரமணிய முதலியார், B.A., F. M. U.)
விலை ரூ. 1-4-0; ராப்பர் ரூ. 1-

ச. திருப்புக்கொளியூர் அவிநாசிப் பெரு
கருணையம்மை பிள்ளைத்தமிழ். (ஆசிரி
C. K. சுப்பிரமணிய முதலியார், B.A., F. M
அவிநாசி - சுந்தரமூர்த்தி சுவாமிகள் முதலைவா
பிள்ளையழைத்த தலம்.) விலை அண

ரு. சசிகாந்தன் ஒரு இனிய தமிழ்ப் புதுமைக் க
(நாவல்). ஆசிரியர் V. N. மருதாசலக் கவுண்டர்.
C.K. சுப்பிரமணிய முதலியார், B.A , F.M.U. எழுதி
முன்னுரையுடன் பாடசாலைப் பதிப்பு. ரூ. 1 0

இனி வெளிவர வேண்டியவை

க. திருநாவுக்கரசு சுவாமிகள்.

உ. திருப்பேரூர்ப் பிரபந்தத் திரட்டு.

கிடைக்குமிடங்கள்:

க. கோவைத் தமிழ்ச் சங்கம், கோயமுத்தூர்.

உ. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்
306, லிங்கச் செட்டித் தெரு, சென்னை

ங. ஷை கழகம், கீழ ரத வீதி, திருநெல்வேலி.